துணை ஆணையர்(மாநிலவரிகள்), கரூர் அவர்களின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்: டாக்டர்.க.சி.க.அருணாபாரதி பி.வி.எஸ்சி

30 DEC 2020

ந.எ.414/2019/அ4 நாள்:24.12.2020

பொருள்: பொதுப்பணிகள் - நேரடி நியமனம் - மாநிலவரித்துறை - ஈரோடு கோட்டம் - கரூர்(மாவ) மாவட்டம் - தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் - தொகுதி -4 பணிகள் - 2015-16, 2016-17 மற்றும் 2017-18 - தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் - இளநிலை உதவியாளர் பணியிடங்களுக்கான போட்டித் தேர்வு - தெரிவு செய்யப்பட்டவர்கள் - திருமதி.கி.லீலா, இளநிலை உதவியாளர் - நிபந்தனைகளுடன் பணிநியமன ஆணை வழங்கப்பட்டது ( Provisional & Conditional) - சாதிச்சான்றின் உண்மைதன்மை சரிபார்க்கப்பட்டது - பணிவரன்முறை செய்திட இசைவு பெறப்பட்டது - ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:

1. செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் சென்னை, கடித எண்-1330/PSD-G1/2019, நாள்:23.03.2019 மற்றும் 23.11.2020.
2. இணை ஆணையர்(மாவ), திருச்சிக்கோட்டம் அவர்களின் செயல்முறைகள் ந.எ.14988/2018/ஆ2, நாள்:15.04.2019.
3. துணை ஆணையர்(மாவ), கரூர் அவர்களின் செயல்முறைகள் ந.எ.414/2019/அ6, நாள்:06.05.2019.
4. மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர், கரூர் ந.எ.5/8943/2019, நாள்: 15.09.2020.
5. இவ்வலுவலக ந.எ.414/2019/அ4, நாள்: 23.09.2020.
6. இணை ஆணையர்(மாவ), திருச்சிக்கோட்டம் அவர்களின் செயல்முறைகள் ந.எ.14988/2018/ஆ2, நாள்: 15.12.2020

-0-0-0-

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம், தொகுதி-4 பணிகள், தமிழ்நாடு அமைச்சுப் பணிகளுக்கான போட்டித் தேர்வு-2015-16, 2016-17 மற்றும் 2017-18ல் நேரடி நியமனத்தில் இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் இணை ஆணையர் (மாவ), திருச்சிக் கோட்டம் அவர்களின் செயல்முறைகளின்படி, கரூர் (மாவ) மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 3-ல் காணும் இவ்வலுவலக செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டு தற்போது உதவி ஆணையர்(மாவ), சென்னிமலை அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திருமதி.கி.லீலா என்பவரின் சாதிச்சான்றிதழில் குறிப்பிட்டுள்ள இந்து-இல்லத்துப் பிள்ளைமார் (BC) என்ற பிரிவினை தனியர் கோருவதற்கு தகுதிவாய்ந்தவரா என்ற விபரம் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் (ம) சிறுபான்மையினர் நலத்துறை, கரூர் மாவட்டம் அவர்களிடமிருந்து மெய்தன்மை (Geneuiness) பெற்று பார்வை 5-ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி மேல்நடவடிக்கையின் பொருட்டு இணை ஆணையர்(மாவ), திருச்சிக்கோட்டம் அவர்களுக்கு பணிந்தனுப்பட்டது.

Scanned by TapScanner

பார்வை 6-ல் காணும் இணை ஆணையர்(மாவ), திருச்சிக்கோட்டம் அவர்களின் கடிதத்தில் பார்வை1-ல் காணும் செயலாளர் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் 23.11.2020 நாளிட்ட கடிதத்தில் "திருமதி.கி.லீலா" என்ற தெரிவாளரின் சாதி மெய்த்தன்மை குறித்த விசாரணை அறிக்கை ஏற்கப்பட்டு அன்னாரது பணியானது, அவர் பணியேற்பு செய்த நாளிலிருந்து விதிகளுக்குட்பட்டு வரன்முறைபடுத்தப்பட வேண்டும் என தெரிவித்துள்ளதாகவும், மேலும் விதிகளுக்குட்பட்டு தனியருக்கு பணிவரன்முறை ஆணை பிறப்பிக்கலாம் எனவும் இசைவளித்துள்ளார்.

எனவே, அரசு விதிககளின்படி, திருமதி.கி.லீலா என்பவர் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 07.05.2019 முற்பகல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்தும், தகுதிகாண் பருவம் தொடங்கியும் இதன் மூலம் ஆணை வழங்கப்படுகிறது.

2. தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் விதி 32(a)(i)ன்படி மேற்சொன்ன இளநிலை உதவியாளர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ந்த மூன்றாண்டுகளில், இரண்டாண்டுகள் தகுதிகாண்பருவ காலத்தினை திருப்திகரமாக நிறைவு செய்யப்பட வேண்டும்.

3. இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் மற்றும் பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் வழங்கப்படும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியினில் தேர்ச்சி பெற வேண்டும்.

4. தனியருக்கு பணிவரன்முறை செய்து வழங்கப்பட்ட இவ்வாணை, தொகுதி -4 பணிகள் 2015-16, 2016-17 மற்றும் 2017-18ல் பணிநியமனம் தொடர்பாக மாண்புமிகு உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள அனைத்து நீதிப்பேராய மனுக்கள் மீதான தீர்ப்பாணைகளுக்குட்பட்டது.

5. மேற்சொன்ன விபரங்கள் தனியரது பணிப்பதிவேட்டில் இடம்பெறும் வகையில் உரிய பதிவுகள் மேற்கொள்ள அலுவலகத்தலைவர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

துணை ஆணையர் (மாநிலவரி),
கரூர்.

24.12.2020

பெறுநர்
- திருமதி.கி.லீலா,
இளநிலை உதவியாளர், -உரிய அலுவலகத் தலைவர் மூலமாக -
உதவி ஆணையர்(மாவ) அலுவலகம்,
சென்னிமலை சரகம்.

நகல்: தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: இணை ஆணையர் (மாவ), ஈரோடுகோட்டம் / திருச்சிக்கோட்டம் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.

நகல்: உதவி ஆணையர்(மாவ),சென்னிமலை சரகம்.
(பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொண்டு பக்க எண் விபரங்களுடன் அறிக்கையிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்.)

நகல்: உபரி-1

Scanned by TapScanner